# தளபதி தாய்ப்பால் உண்டது தயாளு அன்னையிடம் தமிழ்ப்பால் உண்டது தமிழுக்கே அன்னையிடம்!

**திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவில் நடந்த கலைஞர் நூற்றாண்டுக் கவியரங்கில் தலைமையேற்றுப் பாடிய கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதை இதோ:**

தேருக்குத் திருவிழா வரும்
திருவாரூரில்
ஊருக்குத் திருவிழா வந்ததுண்டா?
சாமிக்குப் பரிவட்டம் கட்டும்
திருவாரூரில்
தமிழுக்குப் பரிவட்டம் கட்டியதுண்டா?

பல்லாண்டு பல்லாண்டு
பாடிவரும் வீதிகளில்
நூற்றாண்டு நூற்றாண்டு
பாடிவரக் கேட்டதுண்டா?

கேளுங்கள் தமிழர்களே
இன்று கேளுங்கள்
பாருங்கள் தமிழர்களே
இன்று பாருங்கள்

ஒரு நூற்றாண்டின் முன்னே
இங்கிருந்து 23கிலோ மீட்டர் பின்னே
திருக்குவளை என்ற ஊரின் கண்ணே
ஒரு குழந்தை பிறந்தது

எந்த தேவதையும்
ஹெலிகாப்டரில் வந்து
பூத்தெளிக்கவில்லை

வால்நட்சத்திரம் தோன்றியதாய்
வரலாற்றுக்குத் தகவல் இல்லை

ஒரு தலைவன் தோன்றினான் என்று
தாசில்தார் பதியவில்லை

ஆனால்,
அது குவா என்றதும்
தமிழுக்கு ஒரு சங்கீதம் கேட்டது

அந்தக் குழந்தை கைகள்
உதறியபோது
மூடத்தனத்தின் முகத்தில் குத்து
விழுந்தது

அது கால்கள் உதறியபோது
ஆதிக்கச் சமூகத்துக்கு உதை விழுந்தது

அதன் உடம்பில் ஒட்டிய
மாசு கழுவியபோது
சாதிமத அழுக்கு
தூசு கழுவியது

கட்டைவிரல் விட்டு
அதன் வாயில் தொக்கெடுத்தபோது
தமிழ் தனக்குச் சிக்கெடுத்தது

அதன் தொப்பூழ்க்கொடி அறுத்தபோது
எதிரிகளின் கொடிக்கம்பக் கயிறுகள்
அற்று விழுந்தன

திருவாரூத் தெருவே
உனக்கு என் வணக்கம்

தமிழுக்குப் படைக்கலம் தந்தவனுக்கு
அடைக்கலம் தந்த குடிலே
உனக்கென் வணக்கம்

அன்றைக்கே எதிர்நீச்சலிட்டுக்
கடந்து முடித்த
கமலாலயக் குளமே வணக்கம்

தோளிலே கொடிதாங்கி
நெஞ்சிலே இடிதாங்கி
நாவிலே தமிழ்தாங்கி
அவன் நடந்துபோன
திருவாரூத் தெருப் புழுதியே
உனக்கென் வணக்கம்

காலத் தலைவன் அண்ணாவும்
களத் தலைவன் கலைஞரும்
முதன் முதலில் சந்தித்த
திருவாரூத் திருத்தலமே
உனக்கென் வணக்கம்

வந்திருக்கும் பெருமக்களே
வங்காள விரிகுடாவின் அலைகளே
திருவாரூரில் குவிந்திருக்கும் திசைகளே
என் வணக்கம்

வள்ளுவர் கோட்டம் கண்ட
தலைவனுக்குப் பிறந்து
கலைஞர் கோட்டம் கண்ட
காலத் தளபதியே!

அமைச்சர் பெருமக்கள்!
நாடாளுமன்ற சட்டமன்ற
உறுப்பினர்கள்!
இயக்கத்தின் இதயங்கள்
உங்களுக்கெல்லாம்
என் வாழைப்பூ வணக்கம்

ஒரு யுக நிகழ்வின்
நிகழ் கணத்தில் நிற்கிறீர்கள் நீங்கள்

கலைஞரோடு வாழ்ந்தவர்கள் நாங்கள்
அவர் நூற்றாண்டின் சாட்சிகளாய்
நின்றவர்கள் நாங்கள் என்று
உங்கள் பேரன் பேத்திகளுக்குச்
சொல்லுங்கள்

★★★

**முதலமைச்சருக்கு...**

தளபதியே!
தங்கத் தமிழகத்தின் சிங்க
முதலமைச்சே!

இந்தியாவில் பார்த்ததுண்டா
இப்படியொரு ஜனநாயக அதிசயத்தை

முதலமைச்சராய் இருந்த
தலைவனின் நூற்றாண்டை
முதலமைச்சராய் இருந்தே
பிள்ளை கொண்டாடும்
பெருஞ் சரித்திரத்தை

உன்னைப் பார்த்தால் ஊருக்கல்ல
எனக்கே பொறாமையாய் இருக்கிறது
எவருக்குக் கிட்டும்
இந்தப் பிறவிப் பெருமை

நீ
தாய்ப்பால் உண்டது
தயாளு அன்னையிடம்
தமிழ்ப்பால் உண்டது
தமிழுக்கே அன்னையிடம்

பேனாவைத்தான்
நான் வாங்கிக்கொண்டேன்
அது எழுதிவைத்த உயிலை
நீயல்லவா வாங்கிக்கொண்டாய்

ஓயாமல் உழைக்கிறாய்

நீ தூங்குவதில்லை
ஊர் தூங்கிவிடுகிறது;
உலகம் தூங்கிவிடுகிறது

காடு தூங்கிவிடுகிறது
கலவிகொண்ட கூட்டுப் பறவைகள்
தூங்கிவிடுகின்றன

கரைகளை பிடித்துக்கொண்டே
நதி தூங்கிவிடுகிறது

மேகம் தூங்கிவிடுகிறது

நட்சத்திரங்களைக்
காவலுக்கு வைத்துவிட்டு
நிலாகூடத் தூங்கிவிடுகிறது

இலைகளுக்கிடையில்
காற்று தூங்கிவிடுகிறது

காதலர்களும் கள்வர்களும்
பின் ஜாமத்தில் தூங்கிவிடுகிறார்கள்
நீ தூங்குவதில்லை

இமைகள்
உன் கண்ணுறக்கத்தைக்
கத்திரித்துக்கொண்டே இருக்கின்றன

திட்டம்
கடைக்கோடிக்குச் சேர்ந்துவிட்டதா?

காவிரி
கடைமடைக்குச் சேர்ந்துவிட்டதா?

முதியோர்க்கு
ஓய்வூதியம் சேர்ந்துவிட்டதா?

கல்விக்கூடத்தில்
காலை உணவு சேர்ந்துவிட்டதா?

குடிசையில் எரியும் குண்டு பல்புக்கு
மின்சாரம் சேர்ந்துவிட்டதா?

சிறையிலிருக்கும் மந்திரித்
தோழனுக்கு
மருந்து சேர்ந்துவிட்டதா?

உயிர் நொறுங்கச் சிந்திக்கிறாய்
எல்லாம் சேர்ந்துவிடுகிறது
உன் கண்களில் உறக்கத்தைத் தவிர

கலங்காதே!
மலையின்மீது கல்லெறிந்தால்
மலையின் எடைகூடும்

நதிமீது மழைபெய்தால்
நதிவெள்ளம் கூடும்

உன்மீது அடிவிழுந்தால்
உன் வலைமை கூடும்

உன் திராவிட மாடலைத்தான்
இந்தியா நகலெடுக்கப் போகிறது

பாதை வரும்போது பயணித்துக்
கொள்
நேரம் வரும்போது சயனித்துக்கொள்
கண்ணாடி முன்னே
விமர்சித்துக்கொள்
கட்சிக் காரனையும் கவனித்துக்கொள்

கலைஞர் உன்னை வாழ்த்துவார்

உன் நெற்றியிலே முத்தமிட்டு
வெற்றியிலே பங்கெடுப்பார்

வெல்லட்டும் நூற்றாண்டு
நீ வாழவேண்டும் நூறாண்டு

★★★



இது மாநாட்டுப் பந்தலா
வான் நாட்டுப் பந்தலா?

ஆகாயத்தை இழுத்து வந்து
தரையிலிட்ட கோலமா?

வானவில்லை நெசவுசெய்து
வர்ணமிட்ட ஜாலமா?

மேற்கூரையில்
சில வாடகை நட்சத்திரங்களை
வாங்கிப் பதித்திருந்தால்
சில சோம்பேறி மேகங்களை
உள்கூட்டில் உலவவிட்டிருந்தால்

இது மண்ணகமா விண்ணகமா என்று
தென்னகத்தார்திகைத்திருப்பார்

மூவா இளமைகொண்ட
எ.வ.வேலு
நீ எதையும் செய்யும் ஆளு

★★★

காலத்தின் கருப்போருளே!
கலைஞர் திருமகனே!

உன்னை
எண்ணங்களாலும் சிந்திக்கலாம்
எண்களாலும் சிந்திக்கலாம்
ஒன்றானவன்
அன்னை அஞ்சுகத்துக்கு
ஆண்பிள்ளை ஒருவன் என்பதனால்
ஒன்றானவன்

**- கவிப்பேரரசு வைரமுத்து**



இரண்டானவன்
கருப்பென்றும் சிவப்பென்றும்
இரண்டானவன்

மூன்றானவன்
பெரியார் - அண்ணா - கலைஞர் என்ற
வரலாற்று வரிசையில்
மூன்றானவன்

நான்கானவன்
கலை - இலக்கியம் - அரசியல் -
ஆட்சி என்று
நாலும் தெரிந்தவன் - அதனால்
நான்கானவன்

ஐந்தானவன்
தமிழ்கூறு நல்லுலகத்தை
ஐந்துமுறை ஆண்டதனால்
ஐந்தானவன்

ஆறானவன்
தமிழுக்கு இனிப்பு; இந்திக்குக் கசப்பு
ஏழைக்கு உப்பு;
வயிற்றில் கரைப்பதால் எதிரிக்குப் புளிப்பு
வாதத்தில் உறைப்பு; பித்தம் தீர்க்கும்
துவர்ப்பு
இங்ஙனம்
அறுவகைச் சுவைகளால்
ஆறானவன்

ஏழானவன்
வாரத்தின் எல்லாக் கிழமைகளும்
இயங்கியதால்
ஏழானவன்

எட்டானவன்
திசைகளின் வெற்றிடத்தைப்
புகழால் நிரப்பியதால்
எட்டானவன்

நவமானவன்
கிரகங்களெல்லாம் சுற்றிவரும்
சூரியனாய்த் திகழ்ந்ததனால்
நவமானவன்

பத்தானவன்
உன் இரண்டு கை விரல்களிலும்
கூட்டணிக் கட்சிகளைக்
கட்டி வைத்ததனால்
பத்தானவன்
இன்றுநூற்றாண்டு காண்பதனால்
நீ நூறானவன்

உன்னை
எண்ணங்களாலும் சிந்திக்கலாம்
எண்களாலும் சிந்திக்கலாம்

★★★

ஐந்தமிழ் அறிஞனே

அழிவில்லை உனக்கு

நரம்பும் சதையும் எலும்பும் கொண்ட
உடம்புக்கு அழிவுண்டு

உனக்கோ அழிவில்லை

நிலம் - நீர் - தீ - வளி வெளியென
ஐம்பூதமாய் நீ
ஆண்டுவிட்டுப் போய்விட்டாய்

நீயும் ஒருவகையில் நிலம்தான்
இல்லையென்றால்
அத்தனைபேர் குழிபறித்திருப்பார்களா?
நீ சந்திக்காத மேடுபள்ளமா?

நீ நன்னிலம்
உன்னை வெட்டியவனுக்கும்
குறைந்தபட்சம் தண்ணீர் தந்தாய்
அதிகபட்சம் தங்கம் தந்தாய்

நீ தண்ணீர்
உன்னை உயரத்தில் இருத்தினாலும்
பள்ளம் நோக்கியே பாய்ந்தாய்

நீ தீ!
தலைகீழாய்ப் பிடித்தாலும்
மேல்நோக்கியே எரிந்தாய்

நீ காற்று
அதனால்தான் காற்றுள்ளபோதே
உன்னைத் தூற்றிக்கொண்டார்கள்

வானம் நீ
திசைக்கொன்றாய் சிதறிக் கிடக்கும்
மேகங்களை
கூட்டணி என்ற கூரையின்கீழ்
கொண்டுவந்தாய்

நீ ஐம்பூதம்
உனக்கு அழிவில்லை

★★★

நேற்று
நீல இரவில் ஒரு வெள்ளைக் கனவு

சக்கரநாற்காலியில் வந்தார்
தமிழின் சக்கரவர்த்தி

நலமா தம்பி? என்றார்

எத்துணை காலமாயிற்று
அந்தக் கரகரக்கும் கரகரப் பிரியா கேட்டு

அவர்
கைகளைப் பற்றினேன்
கண்களில் ஒற்றினேன்
அவர் விரல்களில் வழிந்தது
என் கண்களின்மழை

தமிழ்நாடு நலமா?
தமிழர்கள் நலமா?
தளபதி நலமா? என்றார்

தமிழ்நாடு நலமே!
தமிழர்கள் நலமே!
தளபதியைத் தானய்யா
முட்கள் முத்தமிட்டுக்கொண்டே
இருக்கின்றன

அவர் ரோஜா!
முட்கள் முத்தமிடாமல்
என்ன செய்யும்? என்றார்

ரத்தம் வராதா என்றேன்

முட்கள் உரசுவதால்
ரோஜாவில் ரத்தம் வராது
அத்தர்தான் வரும் என்றார்

**தமிழனிடம் வாங்கி
தமிழரையே அடிப்பதுவா
செங்கோல் என்றேன்?**

டெல்லிக்கு எப்போதும்
சொந்தவானிலை இல்லைதம்பிஎன்றார்

**எப்படி என்றேன்?**

இமாச்சலப் பிரதேசத்தின் குளிர்,
ராஜஸ்தான் பாலைவன வெப்பம்
இந்த இரண்டும்தான்
டெல்லிக்கு இரவல் வானிலை

சொந்தத்தில் வானிலை இல்லாத
டெல்லிக்குசொந்தத்தில் மதிநுட்பம்
துலங்குமா என்ன?

**அமைச்சர்கள் - அதிகாரிகள் உறவு
எப்படி இருக்க வேண்டும்?**

அதிகாரிகள் திட்டங்களுக்குச்
சாணையிட
அமைச்சர்கள்தான் ஆணையிட

**தளபதி உங்களைத் தாண்டிய இடம் எது?**

நாட்டின் கண்களாய் விளங்கும்
பெண்களுக்கு இலவசப் பேருந்து
வழங்கியது.
பேருந்துகளை நான் நாட்டுடமை
செய்தேன்
என் செல்வன் பெண்களுக்கு
வீட்டுடமைசெய்துவிட்டார்

**அரசுக்கு எதிராக அவதூறுகள் அடங்க
வில்லையே?**

பறவைகளின் ரகளை
இருக்கும் வரைக்கும்தான்
காட்டில் பசுமை இருப்பதாக அர்த்தம்

**எங்களுக்கு பெரிய குறை?**
என்னது?

நீங்கள் இல்லாத கவியரங்கம்;
அது எப்படி உள்ளது தெரியுமா?

சூரியன் இல்லாத பகல்;
தீயே இல்லாத அகல்
மூலம் இல்லாத நகல்

**உங்கள் நூற்றாண்டுச் செய்தி?**

தமிழர்களே!

சாதிகளாய்ப் பிரியாதீர்கள்;
தமிழராய் ஒன்றுபடுங்கள்

சமூக நீதி உயிராகட்டும்;
மாநில சுயாட்சி உடலாகட்டும்

பிறக்கும் பிள்ளைகளுக்குத்
தமிழில் பெயர்சூட்டுங்கள்

உள்ளூர் அடையாளம் கரைந்து
விடாமல்
உலக நீரோட்டத்தில் கலந்து விடுங்கள்

தமிழுக்குள் உலகம்;உலகுக்குள் தமிழ்
இரண்டுசிறகுகளால்பறந்து செல்லுங்கள்

எவனோ கண்டறிந்த பொருளுக்கு
தமிழில் பெயர்சூட்டாமல்
தமிழன் கண்டறிந்த பொருளுக்கு
உலகம் பெயர் சூட்டட்டும்

இலவசம் பெறுவதைவிட
தமிழர்கள் வள்ளலாய் மாறும்
வாழ்வு பெறுங்கள்

வாழ்க தமிழகம்
வளர்க தமிழர்கள்
வெல்க தமிழியம்